917 917

பிரசுரம் 1.

காந்தி கீர்த்தனைகள்

OFFICE OF THE ...
27 NOV 1937

ஆக்கியோன் :

சு. ஆவுடையப்பன்.

ஓம்
வந்தேமாதரம்.

காந்தி கீர்த்தனைகள்.

இஃது
அம்பாசமுத்திரம்
திருப்புகழ்
சு. ஆவுடையப்ப தேசிகர்
இயற்றியது.

தேவகோட்டை (டைரி)
ராம அருணாசலஞ் செட்டியார் அவர்கள்
பொருளுதவியால்
வெளியிடப் பெற்றது.

உரிமை ஆக்கியோனுடையது.

தேவகோட்டை
16-10-37.

விலை அணா 3.

27 NOV 1937

சமர்ப்பணம்.

எனது ஞான குருவும் தேவார ஆசிரியரும் உத்தம தேசாபிமானி யுமான பிர்மஸ்ரீ சுவாமிநாத அய்யா அவர்கள் திருவடிக்கு இந் நூலை சமர்ப்பிக்கிறேன்.

முன்னுரை.

இற்றை நாளில் பற்பல மாதிரிகளில் கீர்த்தனைகள் பாடப்பெறுகின்றனவென்பது யாவரும் அறிந்ததே. தேசீய கீதங்களும் அம்மாதிரி புதிய மெட்டுகளில் தோன்ற வேண்டுமென்பது எனது உள்ளக் கிடக்கை. ஆதலின் இக் கீர்த்தனைகள் அவ்வகையில் என்னால் கூடியவரை ஆக்கப் பெற்று வெளியிடப்பெறுகின்றன. இதை அன்பர்கள் எல்லோரும் வரவேற்பார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

தங்கள்,

சு. ஆவுடையப்பன்,

ஆக்கியோன்.

தேவகோட்டை,
10-10-37.

மதிப்புரை.

எல்லோரும் அறிந்த எளிய மெட்டுக்களில் தேசீய கீதங்கள் தினந்தோறும் தோன்றி வருகின்றன. ஆனால் அவைகளில் சொற்சுவை பொருட்சுவை யுள்ளவை மிகச் சிலவே. இந்த நூலில் வெளியாகும் பாடல்கள் சகல அம்சங்களும் பொருந்தியிருக்கின்றன. இப் பாடல்களை ஆசிரியரும் பிறரும் பாடக்கேட்டு பலமுறை இன்பமடைந்திருக்கின்றேன். எல்லோரும் ஆதரித்து ஆசிரியருக்கு உற்சாகம் அளிக்க வேண்டுமென்பது என் பிரார்த்தனை.

தேவகோட்டை,
16-10-37.

பொ. திருகூடசுந்தரம்,
எம். ஏ. பி. எல்.

இறைவணக்கம்.

ஜெயந்தி நாயகா—மெட்டு

(1) குறிஞ்சி-ஆதி

(பல்லவி)

வரத நாயகா வந்தருள் தாயகா (வ)

(அநுபல்லவி)

சுரர்தினம் அக மகிழும் புகழுப (வ)

(சரணம்)

பரதமாந்தர்கள் துதி பாவுந்தயாநிதி
புரவலர் புகழுருவே திருவே (வ)

சுதந்தர வாழ்வுபெற தொண்டர்கள் சுகமுற
இதந்தரும் புநிதனே பரனே (வ)

---

(2) நீபக்தி பாக்யசுதா—மெட்டு

(பல்லவி)

நீயென்ன சாமான்யனு க்ருபா
நிதியே சற்குண காந்தியே (நீ)

(அநுபல்லவி)

தூயோனெனத் தொல்லுலகோர்
தோத்திரஞ்செய் பாத்திரனே (நீ)

(சரணம்)

வேதாந்த நிலை யறிந்தோய்
வேத கீதை பாராயண
நாதா யெங்கள் நன்மைகோரி
நானிலத்தி லேயுதித்த (நீ)

(3) நன்மையே செய்யும்—மெட்டு
அரிகாம்போதி-ஆதிதாளம்

(பல்லவி)

இந்து தேசனே எங்கள் நேசனே
சந்த்ர மோகன தாஸன் காந்தியே (இ)

(அநுபல்லவி)

சிந்தைமேவு மெங்கள் துயர்தீர்த்த செல்வா
தேவிபாரத மாதா புதல்வா (இ)

(சரணம்)

சபர்மதி யாஸ்ரம சத்திய சீலனே
சற்சனர் புகழ் சற்குண லோலனே
ஜெபமே தினமுஞ்செய் பவனே உனதிரு
செஞ்சரணடி தினமும் தொழுவோம் (இ)

---

(4) நந்த கேலாலா—மெட்டு
பீலு-ஆதி தாளம்

(பல்லவி)

இந்து தேசாபி மானி நம்
இறைவன் காந்தியே சுதேச (இ)

(அநுபல்லவி)

நந்தேயத்தார் நன்மையுறவே
நாளும் பாடுபடும் த்யாகி (இ)
அடிமை நீங்கி அகிலமோங்க
அரிய தவஞ்செய் ஆனந்தன் (இ)

---

(5) சாந்த முலேகா—மெட்டு

சாமா—ஆதிதாளம்

(பல்லவி)

சாந்த பூபாலா சற்குண சீலா
சாத்வீகப் போர்க்கோலா (சா)

(அநுபல்லவி)

மாந்தர்கள் போற்றிடும்
மாதவ ரேற்றிடும் (சா)

(சரணம்)

ஜீவகாருண்யனே திவ்சலாவண்யனே
ஆவலாய் நின்பதம் அடிபணிந்தோம் நிதம் (சா)

---

(6) வினதாஸுத—மெட்டு

அரிகாம்போதி-ஆதிதாளம்

(பல்லவி)

கதராடையை யேதினமுமணி
கனவானே காந்தி மகாத்மா (கத)

(அநுபல்லவி)

இதமே செய்திடும் ஏந்தலெனவே
எவரும் புகழும் நீதன் (ந)

(சரணம்)

மானிடர் தினம் மகிழ்வுடன் வணங்கிடும்
வரகுண சீலன்
ஞானகுரு நாதனெனவே
வானோர் புகழும் வாய்மை வாய்ந்த (ந)

---

(7) தசரதராஜ—மெட்டு

காபி—ஆதி

(பல்லவி)

பாரதத் தாயருள் பாலன் குணசீலன்
அநுகூலன் தவக்கோலன் (பாரத)

(அநுபல்லவி)

சீர்பெரு மிந்திய தேசத்துச் சீமான்
செல்வ ஜவஹரிலால் போற்றிடும் பூமான்
பாரினில் மாந்தர்கள் பணிந்திடுங் கோமான்
(தேச) பக்திமிகுந்த அவதாரன் உபகாரன்
உயர் தீரன் சுகுமாரன் (பாரத)

(சரணம்)

இன்பமுட னமக்காய் வந்தனன் மதியே
யேற்றதோர் நங்காந்தி யெனுங்குண நிதியே
அன்பனுய ராவுடை யப்பனின் றுதியே
அநுதினமு மனதாய் நாமே படிப்போமே
துயர்ர்போமே யினிதாமே (பாத)

---

(8) சரவணபவா—மெட்டு

கல்யாணி—ஆதி தாளம்

(பல்லவி)

தவசிகாமணி சமரசமணி (தவ)

(அநுபல்லவி)

பவமதே தவிர் பகவத்கீதையே
பாராயணஞ் செய்யுஞ் பரமமேதையே (தவ)

(சரணம்)

சபர்மதி வளர் சத்திய சீலனே
சர்சனர்கள் மகிழ் சற்குண லோலனே
ஜெபமதே தினஞ் செய்தவக் கோலனே
ஜெகமுளோர்க் கெலாம் திவ்யானுகூலனே (தவ)

---

(9) உபசாரமு—மெட்டு

பைரவி—ஆதி தாளம்

(பல்லவி)

உலகம்புகழ் மகாத்மா
உயர்காந்தி மகானே (உ.)

(அநுபல்லவி)

திலகமென ஜெகமீதினில்
திருவவதாரம் செய்தார் (உ)

(சரணம்)

சாதிபேதப்பேய் நீங்கவும் சமரசமெங்கு மோங்கவும்
நீதிநெறிசுய ஆட்சியை நீணிலத்தி லேவாங்கவும்
போதிக்குநங்குருவேயென பூபாலர்கள் புகழ்ந்
[தேற்றிடும்
க்யாதிமிகுமதிமோகனன் கேசவனின் அம்சமாமே

---

(10) காப்பி—ஆதிதாளம்

(பல்லவி)

காந்தி மொழிப்படி செய்வோம் சதா
காலமும் காமினி உய்வோம் மகான் (கா)

(அநுபல்லவி)

மாந்தரான நாமே மகிழ்ச்சியுடன் தாமே
மாக்ஷிமைசேருஞ் சுயாட்சி பெறுதற்கு நங் (கா)

(சரணம்)

பாரத தேசத்தின் மாதவத்தாலவ
தார புருஷனுய்த் தானுதித்தார்
சீரியர் போற்றிடு மாரியனுமெனச்
சீர்பெற்ற மோகன தாசன் கரம்சந்த்ர (கா)

நாம் வேண்டுவது.

(11) சிவபெருமான் கிருபை—மெட்டு

சுருட்டி-ஆதி

(பல்லவி)

சுதந்திரமேபெற வேண்டும் அடிமைத்
துயரம் ஒழியவேண்டும்
ஜெகத்தில் யாண்டும் (சு)

(அநுபல்லவி)

(1) இதந்தரவே கைத்தொழில் மீண்டும்
இராட்டினம்
எங்குப் பாவவேண்டும் வேறென்ன
வேண்டும் (சு)

(2) வறுமைகள் நீங்கிநல் வாழ்வுபெறச் சம
வுரிமை யடையவேண்டும் வேறென்ன
வேண்டும் (சு)

(3) கஞ்சிக்கு வழியின்றிக் கதறித்
துடிக்கும் மக்கள்
நெஞ்சு குளிரவேண்டும் வேறென்ன
வேண்டும் (சு)

(4) சாதி மதத்தின்போரால் சண்டை
யிட்டுத் திரியும்
பேதமை நீங்கவேண்டும் வேறென்ன
வேண்டும் (சு)

(5) பாலனுவுடையப்பன் பாடிடுமிசைத்தமிழ்
பார்மிசை யோங்கவேண்டும்
வேறென்ன வேண்டும் (சு)

சுதந்தர லக்ஷியத்தையுடைய அழைத்தல்

(12) சிவலோகநாத—மெட்டு

தோடி-ரூபகதாளம்.

(பல்லவி)

சுதந்திரமெனும் வாழ்வினைக் கண்டு
சுகித்திடலாம் வாரீர் ஐயே (சுதந்)

(அநுபல்லவி)

இதந்தரு நம் மெழிற் காந்தியின்
இணைமலரடி துணையெனக்கொண்டு (சு)

(சரணங்கள்)

(1) அடிமைவலையில் விழுந்தோம் பகுத்
தறிவினைமுற்று மிழந்தோம்
மிடிமை யகற்ற வழிதேடாது
வீணேகாலங் கழிக்கலானோம் (சு)

(2) பண்டைநிலையை மறந்தோம் வெறும்
பதவிக்கே நாணந் துறந்தோம்
மண்டியிட்டுத் தோத்திரஞ் செய்து
மானமிழந்தோர்போலத் திரிந்தோம் (சு)

கதரணிய வேண்டுதல்

—:0:—

(13) நீது சரணமுலே—மெட்டு

(பல்லவி)

வாங்கி யணிந்திடுவீர் கதருடை
மனமகிழ்வுடன் சோதரரே (வா)

(அநுபல்லவி)

ஓங்கிடுஞ்சம தர்மமேயினி
உலகம் போற்றிடுந் திலகன் சொற்படி (வா)

(சரணம்)

ஏழை யெளியவர் நூற்று நெய்திடும்
இணையிலாக் கதர் உடையுடுத்திடில்
சூழுமடிமை வறுமை நீங்கிடும்
சுகந்தருஞ்செல்வ மிகவு மோங்கிடும் (வா)

(14) சுரராகசுதா—மெட்டு

சங்கராபரணம்-ஆதிதாளம்

(பல்லவி)

சுயராஜ்ய சுகம்பெறவே தோழர்காள்
ஏழைகள் நூற்றிடும்
துய்யக்கதரை யணிவீர் (சுய)

(அநுபல்லவி)

பயநீக்கி நமை யாண்டருள்
பாபகாந்தியின் உரையைத் தவறாது (சுய)

(சரணம்)

ஆதியில்முன்னோரெல்லாம் அணிந்ததுமிவ்வுடையே
ஆதரித்திதையணிவதால் அனைவருமே நலனடை
ஆதலால் தீதுசேர் அன்னியரின் [வோம்
ஆடையை நீக்கி (சுய)

(15) வேலவா உந்தனை—மெட்டு

கல்யாணி-ஆதிதாளம்

(பல்லவி)

இத்தருணமிக வொற்றுமையாக நாம்
சுற்றுவோமே கையால் ராட்டினத்தை (இ)

(அநுபல்லவி)

வித்தகனான நம் சற்குரு காந்தி
வீரமொழிப்படி ராட்டின மேந்தி
சத்தியமாய் நூல் நூற்போமே
சஞ்சலமுமினி போமே (இ)

(பல்லவி யெடுப்பு)

கஷ்டங்கள் நீங்கிட இஷ்டமனதுடன்
கதர் தரித்திடுவோம் (க)

(சரணம்)

சிஷ்டர்கள் மேவுமிந்திய தேசச்
செல்வப் புதல்வர்கள் ஏத்திடு நேசர்
சீரியர் காந்தி யடிபணிவோமே
செய்யும் வகை யிதுவேநமக் காமே (க)

(16) நிஜர் மாமர்முலநு—மெட்டு
உமாபரணம்-ஆதிதாளம்

(பல்லவி)

தினமுங்கதரை யணிவோ மனதாய்
ஜெகமீதினில் சுக வாழ்வு பெறவே (தி)

(அநுபல்லவி)

இனிமேற்பயமேது யேங்கலாமோபுவி மீது
இங்கிதமாகக் கதர்ப்ர சங்கஞ்செய்குவோம் (தி)

(சரணம்)

சாது மகாத்மா காந்தியின் வாக்யம்
தனக்குடன் படுவதே மிகவுஞ் சிலாக்யம்
சூதுசெய்யு மன்னியர் துணியின்மேலேனோ
மோகம்
செல்வனு வுடையப்பனின் நன்மொழிப்படி (தி)

(17) இதுநல்ல சமய—மெட்டு

காஹரப்ரியா—ஆதிதாளம்

(பல்லவி)

இதுநல்ல தருணமையா
எழிலாய்க் கதாணிய (இ)

(அநுபல்லவி)

சதமென நம்பியித் தாணியோர் போற்றிடும்
தவமுனியாநங்காந்தி சாற்றுநன்மொழிப்படி (இ)

(சரணம்)

ஜெகமதிற் பகைமையும் சீக்கிரம் நீங்கிடும்
தெரிவையர் நூல்நூற்பதும் செழித்தினிதோங்கிடும்
அகமதிற்சுகந்தரும் அகிம்ஸையே தேங்கிடும்
அனைத்துயிர் தொழுமீசன் அருள்நமைத்தாங்
[கிடும் (இ)

(18) ஆருக்குப்போன்—மெட்டு

(பல்லவி)

ஆருக்குத் தாய்நாட்டின் அபிமானமிருக்குமோ
அவனே பெரியவனும் (ஆரு)

(அநுபல்லவி)

பாருக்கு ளதிகாரப் பதவியிலிருந்தாலும்
பகதூர். சர். ஆனாலும் பெரியவனாவானோ (ஆ)

(சரணம்)

நீதிசாஸ்திரம்பல வோதினதாலென்ன
நியமனுஷ்டானங்கள் நெறிப்படி செய்தென்ன
பேதமையினாற்றன் சுயவுரிமையிழந்து
பிறர்க்கடிமை யானவன் பெரியவனாவானோ (ஆ)

கதரணியாதிருப்பதின் காரணங் கேட்டல்

(19) ஏனோடி இந்த—மெட்டு

(பல்லவி)

ஏனோநீ கதராடை யணிவதற்கு
இஷ்ட மில்லையென்கிறாயடா தம்பீ (ஏ)

(அநுபல்லவித் தொடர்கள்)

மாநில மீதிலிந்த மதிப்புள்ள கதர்சொந்த
மானநம் சோதரரால் நெய்ததல்லவோ (ஏ)

நேசமுடைய இந்து தேசஞ் சுகமடைய
ஆசையில்லையோ வுனக்கு அடா தம்பி (ஏ)

தாயானவள்பெற்ற தனயன் அழகில்லையேல்
தள்ளியும் விடுவாளோ தயவில்லாமல் (ஏ)

ஞாலமீதினிற் காந்தி நவிலும் வேதவுரையை
சீலமுடனே யறிவா யடா தம்பீ (ஏ)

ஆவுடையப்பன் புகழ் அருமைக்கதரணிய
ஆவலில்லையோ உனக்கு அடா தம்பீ (ஏ)

கதர் விற்பனை

(20) வேலவரே உமை—மெட்டு

(பல்லவி)

ஆடையிது யிதை வாங்கியணிந்திடுவீர்
அடிமை யகலும் ஆதாரவான கதரெனும் (ஆ)

(அநுபல்லவி)

பீடையது நீங்கும் சுகங்கொடுக்கும்
பெருமை யளிக்கும் பேதமதுதனையகற்றுமே
மூடமதியாலே வரும் அனர்த்தம்
முழுவதுமே பழுதறவே நீக்குங்கதர் (ஆ

(சரணம்)

விதவிதமாகவே மனதிற் சிசைந்தகதர்
வேஷ்டியிருக்குதிதை வாங்கி யணிவீர்
இதமும் பெருகும் ஏழையர் வயிர்நிறம்பும்
இணையில் காந்திமுனிவ னிதோபதேசம்
உணர்த்தும் (ஆ)

---

(21) வண்ணான் வந்தானே—மெட்டு

தேடி வாங்குவீரே எல்லோரும்
கூடி வாங்குவீரே கதரைத் (தே)

சித்தமகிழுநல் உத்தமர் காந்தி
சத்திய சொற்படி நித்தமுமேந்தி

வாங்கி யணிந்திடுவீர் உமக்குற்ற
வறுமை போக்கிடுவீர்

நல்ல வாய்மையுள்ள காந்திக் கதரே கதரே
இந்த மானிலத்தோர் மெச்சுங் கதரே கதரே
மிக்க தூய்மையுள்ள சுத்தக் கதரே கதரே
இந்து சோதரர்கள் செய்யுங் கதரே கதரே

அன்னிய ராடையினால் — வருடத்துக்
கறுபது கோடி ரூபாய்

ஆண்டுதோறுங் கிஸ்தி போலவே கட்டி
அடிமையாகித் தினமலைவதோ வெற்றி

அன்பான சோதரரே காங்கிரசில்
இன்பமாய்ச் சேர்வீரே

வெகு ஆதரவாய் வாங்கி யணிவீர் அணிவீர்
அன்னியராடைகளைத் தூர எறிவீர் எறிவீர்
மிகச் சாதனையாய் ஒன்று கூடுவீர் கூடுவீர்
சுவாமிநாதன் சிஷ்யன்கீதம் பாடுவீர் பாடுவீர்

---

(22) மதிச்சியத்திலே—மெட்டு

அம்பைநகர் குடியிருக்கிறது ஏ ஐயா நான்
அனுதினங்கத ராடை விற்கிறது
வந்து விற்கிறது நான் (அ)

நான் புதுசாய்க் கலர்நூல் தினுசுவாங்குறது
அதைப் போட்டுத்தறியில் பேட்டுத்தூக்கி
சீட்டி நெய்கிறது.

நாங்கள்—காலையிலே நூலைநூற்கிறது ஏ ஐயா
சுத்தக்—கதராடையைக் கட்டிக்கொள்ளுகிறது
நாங்கள்—மாலையிலே கூட்டங் கூடுறது
எங்கள்—மஹான் காந்தியுரைத்த புத்தி
மதியைச் சொல்லுகிறது
நான் புறப்பட்டுவெகு நேரமாச்சு

பொழுதடையுமுன் போய்ச்சேர வேண்டும்
ஐயா - கொண்டுவந்ததோர் சரக்கு எல்லாம்
குறையாதப்படி இருக்கு விற்காமல்
கண்டயிடமெல்லாங் கடனே கேட்கிறார்
கையினில் காசில்லை யென்பதே காரணம்
புதிய சால்வை வேஷ்டிகளிருக்குப்
பிடித்தமானதை யெடுத்துக் கொள்ளுங்கள்
சலவைக்காறுலும் போட்டுப் பாருங்கள்
சாயம் போகாது சரக்கும்விடாது
விலையோ சரசம் மிகவும் நேர்த்தி
வெள்ளை லெமன் பச்சை ஸ்கைப்ளு
விருப்பானதோர் நீலம் வயிலெட்
எந்தநிறத்திலும் எடுத்துக் கொள்ளுங்கள்
இதற்குமேல் நானென்ன சொல்ல வேண்டும்
எதை யெடுத்தாலும் ஒபேவில்லை சுத்தக்
கதர் வாங்கலையோ கதர் ஏ ஐயா
திருப்பூர்-கதர் வாங்கலையோ கதர்-நான் (அ)

கிளிக்கண்ணிகள்.

தேசம் செழிப்படைய
திருவவ தாரஞ்செய்த
மாசிலாக் காந்தி மகான் கிளியே
மலரடி போற்றிடுவோம் (1)

தன்னலஞ் சிறிது மில்லாத்
தர்மஉப தேசனடி.
என்னலமும் ஒருங்கமைந்த கிளியே
இறைவனங் காந்தியடி (2)

அடிமை வலையிற் சிக்கி
அலைந்திடு நம்மவரை
விடுவிக்க வேணுமென்று கிளியே
வேண்டும்வழி செய்தாரடி (3)

சந்ததமு நற்தயையும்
சற்குணமு முள்ள நம்
காந்தியே யிவ்வுலகிற் கிளியே
கண்கண்ட தெய்வமடி (4)

ஈசனென்பார் இயேசு வென்பார்
இஸ்லாமியர் தெய்வ மென்பார்
வாசவனோ வென்பாரடி கிளியே
மாநிலத்து மக்களெல்லாம் (5)

காந்த மிருப்பூசியை
கவரும் தன்மைபோலவர்
மாந்தர் தம் உள்ளமெல்லாம் கிளியே
மாக்ஷிமையாய்க் குடிபுகுந்தார் (6)

நாடிடு நங் காந்திமகான்
நமக்காகப் படுந்துயர்

ஏடும் அடங்காதடி கிளியே
எல்லா மெடுத்தெழுத (7)

கல்லுங் கரையுமடி
கடல் நீரும் வற்றுமடி
பல்லுலகோர் போற்று மகான் கிளியே
படுந்துயரஞ் சொன்னலடி (8)

உண்டால் மயக்கு மென்பார்
ஒயின் பிருந்தி வகைகளெல்லாம்
கண்டால் மயக்குமடி கிளியே
காந்தி மகான் தன்னுருவம் (9)

எந்தை திருநாமம்
எவர்சொல்லக் கேட்டாலும்
சிந்தை குளிருதடி கிளியே
செவிக்கின்பம் ஏறுதடி (10)

பூந்திலட்டு ஹல்வாவும்
பூரியும் புளிக்குதடி
காந்தியென்ற நாமமதே கிளியே
கனிவாய் யினிக்குதடி (11)

சாவென்னு மெல்லேவரை
தனிச்சிறையில் வாழ்ந்தாலும்
காவலன் காந்தியினை கிளியே
கணமும் மறக்கேனடி (11)

பருத்தி யதனை நூற்று
பரிவாய்க் கதரைநெய்து
விருத்தி யடைவீரென்றார் கிளியே
வேந்தனங் காந்தியடி (13)

ஆசையினா லன்னியர்
ஆடையை வாங்கினதால்
காசை யிழந்தோமடி கிளியே
கவலைக்குள் ளானோமடி (14)

நன்மை மிகத்தருநம்
நாட்டுக் கதருடையை
செம்மையுட னணிவோம் கிளியே
தீர்ந்திடும் பஞ்சமெல்லாம் (15)

வறுமைப் பிணிதொலையும்
வையத்தினி லடிமைச்
சிறுமையும் நீங்குமடி கிளியே
சீர்பெருகும் கதரணிந்தால் (16)

பாரத மக்களுய்ய
பாடுபடுங் காந்திமகான்
சீருடைய காலத்திலே கிளியே
சேர்ந்துவொன்றாய் வாழ்ந்திடுவோம் (17)

செல்வ அம்பைநகர்வாழ்
சேயனா வுடையப்பன்

நல்மொழி வாசகமே கிளியே
நாளும் படிப்போமடி (18)

கோரி பஜன—என்ற மெட்டு.

(பல்லவி)

ஓட்டுப்போடுவோ மூபர் வாகக்காங்கிரசில்நிற்கும்
உத்தமசகோதரர் கட்கே (ஓட்)

நாட்டி லுயர்நமது நாட்டின் விடுதலையை
நாமும் விரும்புவது ஞாயமென்றால்
காட்டிக்கொடுக்கும்பிற் போக்காளர் கட்சிகளெல்லாம்
கலங்கி நிலைகுலைந்திட
கங்கணங்கட்டி உங்கள் வோட்டினை
மங்களமுடன் மஞ்சள் பெட்டியில்
கொஞ்சமும் சபங்கா தளித்திடுவீர்
கஞ்சிக்கு வழியின்றி விதியின் செயலிதென்று
கதறித்துடித்திடு மக்கள்
அஞ்சும் வறுமையொடு அடிமைப்படுகுழியில்
ஆழ்ந்திடாதிருப்ப தற்கும்
வஞ்சகமாகிய புதிய சீர்திருத்த
மாயையை யொழிப்பதற்கும் (ஓட்)

மங்களம் ஜெயமங்களம் நித்யசுப
மங்களம் ஜெயமங்களம்

எங்கும் புகழுமெங்கள் எழிற்காந்தி மாமுனிக்கும்
திங்கள் வதனமுள்ள தேவிகஸ்தூரி பாய்க்கும் (ம)

தேசபக்தி நிறைந்த தென்னாட்டினேனர்கட்கும்
தாசனு வுடையப்பன் சாற்றுக் தமிழ்மொழிக்கும்(ம)

NAL

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-NOV 19[illegible]
MADRAS

குமரன்
பவர் பிரஸ்,
காரைக்குடி.